செ.வெ.எண்: 691 நாள் 26.10.07

# பத்திரிக்கை செய்தி

- மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறை தொடர்புடைய அலுவலர்களிடம் திட்ட வளர்ச்சிப்பணிகள் குறித்து தலைமைச் செயலகத்தில் 25.10.2007 அன்று காலை 11.00 மணி அளவில் ஆய்வு செய்தார்.

- மக்கள் நல்வாழ்வுத்துறையின் செயல்பாடுகள் பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. துறையின் செயல்கள் மேலும் சிறப்புடன் நடைபெறவும், பல்வேறு திட்டங்களை சிறந்த முறையில் செயல்படுத்தவும், திட்டங்கள் மக்களிடம் விரைந்து சென்றடையும் வகையில் அலுவலர்கள் முனைப்புடன் செயல்படுவது குறித்தும் அமைச்சர் வலியுறுத்தி கூறினார்.

- கொசுக்கள் மூலம் சிக்கன்குனியா, மலேரியா, டெங்கு காய்ச்சல் போன்ற நோய்கள் பரவுவதைத் தடுப்பதற்கு கொசுக்களை முற்றிலுமாக அழிக்க வேண்டும் என்ற கருத்தை அமைச்சர் வலியுறுத்தினார். அதற்கு தேவைப்பட்டால் அதிகமான மஸ்தூர் பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணியமர்த்தி ஒரே சமயத்தில் கொசுக்கள் அதிகமாக உள்ள அனைத்து கிராமங்கள் நகர்புறங்களில் கொசுமருந்தை தொடர்ந்து உபயோகித்து கொசுக்களே இல்லாத நிலையை உருவாக்கவேண்டும் என வலிறுத்தினார். பொதுசுகாதார இயக்குநரை இப்பணி தொடர்பாக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறும் வலியுறுத்தி பேசினார். இக்கூட்டத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் திரு.வி.கே.சுப்புராஜ்., இ.ஆ.ப., சிறப்பு செயலாளர் திரு.டேவிதார், இ.ஆ.ப., பேறுசார் மற்றும் குழந்தைகள் நலத்திட்ட இயக்குநர் செல்வி.ஆபூர்வா, இ.ஆ.ப மற்றும் திருமதி.சுப்ரியா சாகு, இ.ஆ.ப ஆகியோர் கலந்துகொண்டனர்.

- பின்னர் 25.10.2007 அன்று மாலை 4.00 மணி அளவில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், துறைசெயலாளர் மற்றும் மருத்துவக்கல்வி இயக்குநர் ஆகியோருடன் அரசு பொதுமருத்துவமனைக்குச் சென்று பொதுமருத்துவமனை முதல்வர் மற்றும் கண்காணிப்பாளர் ஆகியோருடன் பொதுமருத்துவமனையின் பல்வேறு பிரிவுகளை பார்வையிட்டார். இருதய அறுவைச்சிகிச்சைப் பிரிவில் சீரமைப்பு நடைபெறும் அறுவை அரங்கத்தைப் பார்வையிட்டு அப்பணியை விரைவில் முடித்து, காத்திருக்கும் இருதய நோயாளிகளுக்கு தேவையான அறுவை சிகிச்சைகளை தொய்வின்றி செயல்படுத்துமாறு முதல்வரை கேட்டுக்கொண்டார்.

- முதியோர் சிகிச்சை பிரிவில் உள்நோயாளிகளை சந்தித்து அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் பற்றி விசாரித்தார். அவர்கள் சிகிச்சை நல்லமுறையில் வழங்கப்படுவதாகவும் மிகவும் திருப்திகரமாக உள்ளது எனவும் தெரிவித்தனர். இருதய நோய்பிரிவிலும் அறுவை சிகிச்சைபெற்ற நோயாளிகளை சந்தித்து சிகிச்சை அளிக்கப்படும் தன்மையை கேட்டறிந்தார்.

- மாலை 5.30 மணியளவில் மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் மற்றும் மருத்துவக்கல்வி இயக்குநருடன் அரசு ஸ்டான்லி மருத்துவமனையை பார்வையிட்டார். குடல், இரைப்பை நோய்பிரிவின் பேராசிரியர் மருத்துவர் திரு.சுரேந்திரன், குடல், இரைப்பை அறுவை சிகிச்சைப் பிரிவில் பல்வேறு சிகிச்சைமுறை நடைபெறும் அரங்குகளின் சிறப்பு பற்றி அமைச்சரிடம் விளக்கமாகக் கூறினார்.

- பின்னர் அமைச்சர் மாணவர் விடுதியைப் பார்வையிட்டார். பழுதடைந்துள்ள மிகப்பழமைவாய்ந்த மாணவர் விடுதிக்கட்டடங்களை புதுப்பிக்கும்பணியை விரைவில் செயல்படுத்துமாறு ஸ்டான்லி மருத்துவமனை முதல்வரை கேட்டுக்கொண்டார். விடுதியின் உணவுகூடத்தைப் பார்வையிட்டு சுகாதார முறையில் உணவு தயாரிப்பது மற்றும் மாணவர்களிடம் குறை, நிறைகளை கேட்டறிந்தார். முதல்வரிடம் மாணவர் விடுதிகள் மற்றும் மருத்துவமனையின் சுற்றுச்சூழல் மிகவும் தூய்மையாகவும் ஆரோக்கியமான சூழ்நிலையில் வைத்துக்கொள்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கூறினார்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.